**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2364/அ4/2024, நாள்.19.08.2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – 2024–2025 ஆம் கல்வியாண்டில் பள்ளி மேற்படிப்பில் முதலாம் ஆண்டு பயின்ற பிவ/ மிபிவ/சீம இனத்தைச் சார்ந்த மாணவ / மாணவியர்களுக்கு (மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 2024–2025) மிதிவண்டிகள் வழங்குதல் – பள்ளி தலைமையாசிரியர்களுக்கான கூட்டம் நடைபெறுதல் – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க.எண்.4/17593/2024, நாள். 17.08.2024

•••••

பார்வையில் காணும் வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்திற்கிணங்க, அரசு / நகராட்சி / ஆதிதிராவிட நல / அரசு நிதியுதவிபெறும் / பகுதி நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து பிரிவு மணவ / மாணவியர்களின் 2024–2025 ஆம் ஆண்டிற்கு மிதிவண்டிகள் வழுங்கும் திட்டம் செயல்படுத்துவது மற்றும் மாணாக்கர்களுக்கு விநியோகம் செய்யப்படும் மிதிவண்டிகளின் விவரங்களை EMIS இணையதளத்தில் பதிவு மேற்கொள்வது மற்றும் பள்ளி படிப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் 2022–2023 (மற்றும்) 2023–2024 குறித்து வரும் 20.08.2024 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு காட்பாடி, காந்திநகர், SSA கட்டிட வளாகத்தில் பள்ளி தலைமையாசியர்ளுக்கான கூட்டம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும்.

எனவே, அரசு / நகராட்சி / ஆதிதிராவிட நல / அரசு நிதியுதவிபெறும் / பகுதி நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மேற்காணும் படி நடைபெறும் கூட்டத்தில் தவறாமல் கலந்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் கூட்டத்திற்கு வரும்போது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து 2 நகல்களில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – படிவம்

//ஒப்பம்//

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
அரசு / நகராட்சி / ஆதிதிராவிட நல / அரசு நிதியுதவிபெறும் /
பகுதிநிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.